PRIVATE AND CONFIDENTIAL

(for members only)

AMERICAN MISSION COLLEGE UDUPPIDDY

LIGHT DISPELS DARKNESS

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

**2002-12-01 ஞாயிறு காலை 9.30 மணி**

(பழைய நேரம்)

**பேராசிரியர் அ.துரைராசா ஞாபகார்த்த**

மண்டபத்தில் நடைபெறும்

**வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்**

சமர்ப்பிக்கவுள்ள

# ஆண்டறிக்கை

**2001 - 2002**

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## 2001 - 2002 ஆண்டிற்கான
## பழைய மாணவர் சங்கம்
## *கனடாக் கிளை*

| | |
|---|---|
| போஷகர்:- | திரு.M.S.பேரின்பநாயகம் |
| தலைவர்:- | திரு.N.செல்வரத்தினம் |
| உபதலைவர்கள்:- | திரு.S. சிறீவாமதேவன்<br>திரு. N. அசோக்குமார் |
| செயலாளர்:- | திரு.செல்வி சீதா வேலுப்பிள்ளை |
| உப செயலாளர்:- | திரு.T.கோபிராஜ் |
| பொருளாளர்:- | திரு.M.மோகனதாஸ் |
| உபபொருளாளர்:- | திரு.T.சோதிலிங்கம் |

நிர்வாக சபையின் ஏனைய அங்கத்தவர்கள்:-

திரு.கனக மனோகரன்
திரு.N.செல்வராசா
திரு.N.பிரேம்குமார்
திரு.S.பாலேந்திரன்
திரு.P.நவநாதன
திரு.V.பாலதாஸ்
திரு.M.கேதீஸ்வரநாதன்

கணக்காய்வாளர்:- திரு.M.சின்னத்தம்பி

தர்மகர்த்தா சபை (Board of Trustees:)

திரு.V.சொர்ணலிங்கம்
திரு.V.புவனச்சந்திரன்
Dr.T.வசந்தகுமார்

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்
பதின்நான்காவது வருடாந்தப்
# பொதுக்கூட்டம்

இடம்:- அ.மி.கல்லூரி கே.ரி.ஜோன் மண்டபம்
காலம்:- **2002-12-01** ஞாயிறு காலை 9.30 மணி
தலைவர்:- பேராசிரியர் Dr. அ. நவரத்தினராசா

நிகழ்ச்சி நிரல்

01) மங்கள விளக்கேற்றல்
02) தலைமைஉரை
03) அதிபர் உரை
04) பதின்மூன்றாவது வருடாந்தப்பொதுக்கூட்ட அறிக்கை
05) வரவு - செலவு அறிக்கை
06) 2001-12-09 முதல் 2002-11-30 வரையான ஆண்டறிக்கை, நுண்கலைமன்ற அறிக்கை
07) பிரேரணைகள்
08) புதிய ஆண்டிற்கான செயற்குழு தெரிவு
09) புதிய ஆண்டிற்கான செயற்திட்டம்
10) வேறு விடயங்கள்
11) நன்றியுரை

தயவுசெய்து உரிய நேரத்திற்கு சமூகம்தந்து ஒத்துழைப்பு நல்கவும்

*உடுப்பிட்டி அ. மி. கல்லூரி*
*ப. மா. சங்கம்*
*உடுப்பிட்டி.*

*திருமதி இ. தில்லையம்பலம்*
செயலாளர்

## கல்லூரி அதிபரின் அறிக்கை 2001/2002
## ஆனி – வைகாசி

நீண்ட வரலாற்றுப்பாரம்பரியம் கொண்ட எமது கல்லூரி 150 வருடங்களை கடந்து விட்டது. 150 வருடங்களாக நீடித்து நிலைத்து உயிர்வாழும் இக்கலைத்தாயின் புதல்வர் ஒருவர் இன்றைய விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்வதையிட்டு கல்லூரிச்சமூகம் புளகாங்கிதம் அடைகிறது.

### கல்லூரியின் ஆளணியினர்

| | |
|---|---|
| மொத்த மாணவர் தொகை | 1101 |
| ஆரம்பப்பிரிவில் கல்வி கற்போர் | 309 |
| இடைநிலைப்பிரிவு | 543 |
| உயர்தர வகுப்பு | 249 |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | 42 |
| பட்டதாரிகள் | 24 |
| பட்டதாரிகள் அல்லாதோர் | 18 |
| கல்வி சாரா ஊழியர்கள் | 07 |

ஆரம்பப்பிரிவில் 8 ஆசிரியர்களும், ஆங்கிலப்பாடத்திற்கு 5 ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்பத்திற்கு ஒரு ஆசிரியரும் உடனடியாக தேவைப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### பௌதீக வள விருத்தி

கல்லூரி முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டு 15 வருடங்கள் ஆகின்றன. எமது

வகுப்பறையின் தேவை 36

தற்போதைய நிலவரப்படி உள்ளது 20

இவற்றைவிட விசேட வகுப்பறைகளுக்கான தேவை 07

விஞ்ஞான ஆய்வுகூட தொகுதி ஒன்றிணைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன தற்காலிகமான வகுப்பறைகளில் இயங்கி வருகின்றன.

15 வகுப்பறைகள் தற்காலிக கொட்டகையின் கீழ் இயங்குகின்றன. இரு வகுப்பறைகள் ஒன்று சேர்க்கப்பட்டு தற்காலிகமாக ஒரு நூலகம் மிகச்சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. சென்ற வருடம் புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியிலிருந்து 11 இலட்சம் ரூபா நிறைவேற்படாத கட்டத்தொகுதி பூர்த்தி செய்வதற்காகப் பெறப்பட்டது.

இத்தகைய இடர்பாடுகளுக்கு மத்தியிலும் கல்லூரி மாணவர்கள் தளராத உறுதியோடு கல்வி கற்பது பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

பரீட்சைப் பெறுபேறுகள்

கல்லூரியின் விருத்தி பரீட்சை முடிவுகளிலேயே தங்கியிருக்கின்றது. 5ம் ஆண்டு புலமைப்பரீட்சையில் பின்வரும் மாணவர்கள் சித்தியடைந்தனர்.

01. செல்வன் T. திப்சன்னா
02. செல்வன் A. சஜீவன்
03. செல்வன் T. ரமேஷ்
04. செல்வன் M. சண்முகன்
05. செல்வன் V. சுபராஜ்

க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவரின் எண்ணிக்கை 72 இவற்றுள் உயர்தர வகுபபில் கல்வி கற்பதற்கு தகுதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 41 ஆகும்.

க.பொ.த(உ/த) பரீட்சை பாடசாலையின் வளர்ச்சியைத் தீர்மானிக்கின்ற முக்கிய குறிகாட்டியாக அமைகின்றது. உயர்தர பரீட்சையில் இவ்வருடம் கணிதத்துறையில் 3 பாடங்களிலும் மிக திறமைச்சித்தி அடைந்த மாணவன் செல்வன் சு. சுதாகரன். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 01. | விஞ்ஞான கணிதத்துறை | 15 |
| 02. | கலை வர்த்தகத்துறை | 54 |

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளின் பிரகாரம் பின்வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

01. செல்வன் சுப்பிரமணியம் சுதாகரன்
02. செல்வன் சுரேந்திரநாத் ஜீவநாத்
03. செல்வன் திருஞானசம்பந்தமூர்த்தி சிவகலாபன்
04. செல்வன் காந்திநாதன் மகிந்தன்

இவர்கள் நால்வரும் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். செல்வன் அரியநாயகம் துஷ்யந்தன் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

01. செல்வன் கணேசன் கிருஷ்ணகுருபரன்
02. செல்வன் மதியானந்தகுரு செல்வகுமார்
03. செல்வன் கணேசசுந்தரம் ஞானப்பிரகாசம்

04. செல்வன் தருமலிங்கம் கிரிதரன்

இவர்கள் நால்வரும் பௌதீக விஞ்ஞானத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டனர்
.

கலைத்துறையில்,

01. செல்வி சீவரத்தினம் இன்பரூபா

02. செல்வி திருநாவுக்கரசு கவிதா

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டவர் ஆவர்.

இரண்டாவது பட்டியலில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுத்துறை சாராத பரீட்சை பெறுபேறுகள்

வலய மட்டத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களாக பின்வருவோர் அறிவிக்கப்பட்டனர்.

சமூகக்கல்வி

01. செல்வன் சி. சேயந்தன்

02. செல்வன் சி. சஞ்சய்

03. செல்வன் பு. இளம்பரிதி

04. செல்வன் மு. லவக்குமாரன்

ஆங்கிலம்

01. செல்வன் R. கோபிராகவன்

02. செல்வன் P. குருபரன்

03. செல்வன் S. கஜேந்திரன்

தமிழ்த்தினம்

01. செல்வன் சு. ஸ்ரீராம்

02. செல்வன் இ. கோபிராகவன்

03. செல்வன் சி. ஹரிகரன்

04. செல்வி V. ஜெயதர்சினி

05. செல்வி. T. காயத்திரி

06. செல்வன் மா. பிரசாந்

07. செல்வன் அ. சுஜிந்தன்

கணித விஞ்ஞானம்

01. செல்வன் பா. குருபரன்

02. செல்வன் கு. கணேஷானந்

மெய்வல்லுநர் போட்டி, உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், மென்பந்து துடுப்பாட்டம் ஆகிய துறைகளில் வருடாவருடம் கல்லூரி சாதனை புரிந்து வருகிறது.

உதைபந்தாட்டம் 14 வயது
பொறுப்பாசிரியர் திரு. ச.செல்வக்குமரன்
அணித்தலைவர் துரைச்சாமி தயாதர்சன்
வலயமட்டத்தில் 3ம் இடம் கிடைத்தது.
16 வயது பிரிவு
பொறுப்பாசிரியர் திரு. ச. செல்வக்குமரன்
அணித்தலைவர் ப. செல்வகாந்தன்
அரையிறுதி ஆட்டம் வரை முன்னேறியது.
18 வயது பிரிவு
பொறுப்பாசிரியர் திரு. ச. செல்வக்குமரன்
அணித்தலைவர் சி. நரேஸ்
அரையிறுதி ஆட்டம் வரை முன்னேறியது.
கரப்பந்தாட்டம்
19 வயது பிரிவு
பொறுப்பாசிரியர் திரு ச. செல்வக்குரமன்
பயிற்றுநர் R. வசீகரன்
அணித்தலைவர் செல்வன் து. ஸ்ரீவர்ணன்
வலயமட்டத்தில் முதலாம் இடம் கிடைத்தது.
கரப்பந்தாட்டம்
17 வயது
பொறுப்பாசிரியர் திரு. ச. செல்வக்குமரன்
பயிற்றுநர் திரு. R. வசீகரன்
அணித்தலைவர் செல்வன் கு. குணபாஸ்கர்
வலய மட்டத்தில் முதலாம் இடம் கிடைத்தது
கரப்பந்தாட்டம்
15 வயது பிரிவு
பொறுப்பாசிரியர் திரு. ச. செல்வக்குமரன்
பயிற்றுநர் திரு. R. வசீகரன்
அணித்தலைவர் செல்வன் மா. மணிவர்மன்
வலய மட்டத்தில் முதலாம் இடம் கிடைத்தது

பழைய மாணவரான திரு சு. வசீகரன் எவ்வித கொடுப்பனவுமின்றி ,இலவசமாகவே பயிற்சி அளித்துவருவது குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டம்:- 13 வயதுப்பிரிவு
பொறுப்பாசிரியர்:- திரு.இ.தமிழ்மாறன்
பயிற்றுநர்:- திரு.ஞா. ஞானதயாளன்
அணித்தலைவர்:- செல்வன் T. நிருஷாந்

துடுப்பாட்டம்:- 15 வயதுப்பிரிவு
பொறுப்பாசிரியர்:- திரு. இ. தழிழ்மாறன்
அணித்தலைவர்:- செல்வன் அ. பிரதீபன்
துடுப்பாட்டம் (மென்பந்து):- 19 வயதுப்பிரிவு
பொறுப்பாசிரியர்:- திரு.இ. தழிழ்மாறன்
அணித்தலைவர்:- செல்வன் ஜெயபாலன் ஜெயப்பிரகாஷ்

வலயமட்டத்தில் இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.

துடுப்பாட்ட விளையாட்டினை நாம் ஆரம்பிப்பதற்கு பழைய மாணவர் சங்கம் தாராளமாக நிதியுதவியை எமக்கு தந்துள்ளது.

இப்போட்டிக்கான உபகரணங்கள் அண்மைக்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டதால் அடுத்துவரும் காலங்களில் 17 வயதுப்பிரிவு படிப்படியாக ஆரம்பிக்கப்படும்

மெய்வல்லுநர் போட்டி
தனிப்பட்ட சாதனை

01. 13 வயதுப் பிரிவில் மாசிலாமணி மணிவர்மன் உயரம் பாய்தலில் மாகாணமட்டத்தில் இரண்டாம் இடம் பெற்று தேசியமட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டவர்

02. 21 வயதுப் பிரிவில் மோகனராசா வசந்தன் உபமாகாணமட்டத்தில் வெற்றிவீரனாக திகழ்ந்து தேசியமட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டவர்

## சாரணர் இயக்கம்

புகழ் பெற்ற சாரணர்கள் பலர் இக்கல்லூரியில் இருந்து உருவாகியுள்ளனர். இதன் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கம் விழிப்பாக இருந்து பலவகையிலும் கல்லூரிக்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறது. கல்லூரி விழாக்கள் ஆலய உற்சவங்கள் போன்றவற்றிலும் முதன்மையாகச் செயற்பட்டு வருகின்றது.

பொறுப்பாசிரியர்:- திரு. சி. நாகேந்திரன்
உதவிப்பொறுப்பாசியர்:- திரு. சு. ஜெயானந்தகுமார்
சாரணத்தலைவர்:- செல்வன் ஜெ. ஜெயப்பிரகாஷ்

## மக்கள் நலன்புரி சேவைக்கழகம்

இக்கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பாடசாலை தொடங்குகின்ற நேரம் முடிவுறுகின்ற நேரங்களில் வீதிப்போக்குவரத்து சேவை கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். சென்ற வருடம் யாழ் மாவட்டத்தின் பலபாடசாலைகள் கலந்து கொண்ட நிகழ்வில்

மிக அதிகமான புள்ளிகளைப் பெற்று வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பொறுப்பாசிரியர்:- திரு. ச. செல்வக்குமரன்
அணித்தலைவர்:- செல்வன் சிங்காரம் நரேஸ்
உதவி அணித்தலைவர்:- செல்வன் விஸ்பபாலசிங்கம் மணிமாறன்

## மாணவர் சங்கங்கள்

ஆரம்பப்பிரிவு கனிஷ்ட இடைநிலைப்பிரிவு சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு, உயர்தர பிரிவு என நான்கு வகையான சங்கங்கள் மாணவரின் ஆக்கத்திறனை வளர்க்கும் பொருட்டு இயங்கி வருகின்றன. விசேட மன்றங்களாக க.பொ.த.(உ/த) கலை வர்த்க மாணவர் மன்றமும், விஞ்ஞான மாணவர் மன்றமும் இயங்கி வருகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மாணவர் ஒன்றியம் ஒன்று இயங்கிவருகின்றது. இந்துமாணவர் சங்கம், கிறிஸ்தவ மாணவர் சங்கம் சமய விழாக்களை நடாத்துவதில் முழுமூச்சாக செயற்பட்டு வருகின்றது. வாராந்த வெள்ளி ஆராதனை நால்வர் குருபூசை, நவராத்திரி விழா, ஒளிவிழா இவற்றுடன் இலக்கியப் பெருவிழாக்களும் நடாத்தப்பட்டு வருகின்றது.

## பழைய மாணவர் சங்கம்

தலைவர்:- பேராசிரியர் அ. நவரட்ணராஜா
செயலாளர்:- திருமதி இ. தில்லையம்பலம்
பொருளாளர்:- திருமதி ப. அருள்வேல்நாதன்

இச்சங்கம் கல்லூரியின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றி வருகின்றது.

2001 யூலை தொடக்கம் 2002யூன் வரைக்கும் பாடசாலைச் செலவுகள் பழைய மாணவர் சங்கத்தை சார்ந்தது

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக யாழ் செயலகம்செல்ல | 1500.00 |
| 2. | 150 ம் விழா ஆண்டு உதயனில் பிரசுரிக்க | 12000.00 |
| 3. | நூலகப்புத்தகம் பழுதுபார்க்க ' | 12464.00 |
| 4. | தொண்டர் ஆசிரியர் வேதனம் | 21000.00 |
| 5. | சாரணீயச் செலவு | 2250.00 |
| 6. | இல்ல விளையாட்டு போட்டிக்காக பரிசுகொடுத்தது | 5026.00 |
| 7. | கொழும்பிலிருந்து ஒலிபெருக்கி வரச்செலவு | 8600.00 |
| 8. | Band பழக்கியவர்க்கு வேதனம் | 1500.00 |
| 9. | 5ம் ஆண்டு புலமைப்பரிசின் வினாத்தாள்களின் செலவு | 2802.00 |

| | | |
|---|---|---|
| 10. | கிறிக்கெட் விளையாட்டுக்கு செலவு | 3580.00 |
| 11. | உதைபந்தாட்டம் | 3000.00 |
| 12. | கரப்பந்தாட்டம் | 3146.00 |
| 13. | கணனி ஆசிரியை | 3000.00 |
| | | 39868.00 |

சங்கத்தின் இயக்கத்திற்கு வலுவூட்டும் வகையில் கனடாச்சங்கத்தினர் வானவில் என்ற கலை நிகழ்ச்சியை நடாத்தி அதன்மூலம் சேகரிக்கப்பட்ட பணம் முழுவதையும் தாய் சங்கத்திற்கு அனுப்பிவைத்தது.

வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல் பாடசாலை பரிசளிப்பு விழாவை நடாத்துதல் பரீட்சை பெறுபேறுகளை அதிகரிப்பதற்கு முன்னேடித்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குதல் எனப் பலவழிகளில் கல்லூரி விருத்திக்கு துணையாக நிற்கின்றது. எவ்வழியிலும் எமது பழைய மாணவர் சங்கம் யாழ் மாவட்ட பாடசாலைகளிலேயே மிகமுற்போக்கானதும் வலிமைவாய்ந்ததுமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக நின்று தகுந்த ஆலோசனைகளை வழங்கி எம்மை ஊக்குவித்து உதவுகின்ற வடமராட்சி கல்வி வலய கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர், உதவிக்கல்விப்பணிப்பாளருக்கும், கணக்காளர், அலுவலக அதிகாரிகள், ஊழியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அனைவருக்கும் எமது நன்றிகள். பழைய மாணவர் சங்கம் மனம் கோணாது நாம் கேட்கும் உதவிகளை அவ்வப்போது செய்து தருகின்றது. கொழும்புச்சங்கம், கனடாச்சங்கம், என்பன கல்லூரித்தாயுடன் உறவுப்பாலத்தை கட்டி எழுப்புவதில் நெருக்கமாக இயங்கி வருகின்றன.

This is our School
Make me Proud of it
Make it Proud of me

இது எங்கள் கல்லூரியின் தாரக மந்திரம்

திரு. கி. நடராசா
(அதிபர்)

## யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## 2001 / 2002 ஆண்டு
# 13வது பொதுக்கூட்ட அறிக்கை

எமது பழைய மாணவர் சங்க 13வது வருடாந்தப் பொதுக்கூட்டம் 09-12-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் எமது கல்லூரியிலுள்ள K.T. ஜோன் மண்டபத்தில் தலைவர் பேராசிரியர் அ. நவரத்தினராஜா அவர்கள் தலைமையில் இருநிமிட மௌன வணக்கத்துடன் ஆரம்பமானது.

அத்தருணம் தலைவர் பாடசாலை அதிபர் கி. நடராஜா, தலைவர் திரு.இ.முத்துரத்தினானந்தன் திரு.க.சண்முகசுந்தரம் திரு.சி. சுப்பிரமணியம் ஆகியோரால் மங்கள விளக்கேற்றப்பட்டது.

தலைவர் தமது உரையில் பழைய மாணவர் சங்கம் கல்லூரிக்கு ஒரு முக்கிய உதவி அமைப்பாகும். ஒருவர் தாம் கற்ற கல்விக்கூடத்தை மறக்காது எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் அதன் அபிவிருத்திக்காகப் பாடுபடல் வேண்டும். இந்தவகையில் இன்று எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கனடா கொழும்புக் கிளைகள் எமது கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பெரும் பணியாற்றுகின்றன. லண்டனிலும் பழைய மாணவர் சங்கம் ஒன்று அமைப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது எனக் கூறினார். போர்ச்சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட எமது கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்காகக் கனடாக்கிளைச் சங்கம் எவ்வளவு உதவிகளைச் செய்துள்ளது எனவும் கூறினார். இதே நேரத்தில் எந்த ஒரு கிளைச்சங்கமும் கல்லூரிக்குச் செய்யும் உதவிகளைத் தாய்ச்சங்கத்தினூடாகவே செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறினார்.

கல்லூரியின் கல்வி தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சைப் பெறுபேற்றைப் பொறுத்தவரையில் மேலும் கூடிய மாணவர்கள் சித்தியடையக் கூடிய முறையில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும் எனக் கூறினார். பல்கலைக்கழகத்திற்கு இந்தமுறை கூடிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்த அவர் வருங்காலத்தில் மேலும் கூடிய மாணவர்கள் தெரிவு செய்யப்படக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

அடுத்ததாக வறிய மாணவரை இனங்கண்டு அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். அந்த உதவியை கொழும்புக்கிளைச் சங்கம் தொடர்ந்து செய்யும் எனக் கூறினார்.

விளையாட்டுத் தொடர்பான உதவிகளைச் செய்வதற்கு எமது சங்கம் என்றும் தயாராக உள்ளது. விளையாட்டு உபகரணங்கள், பயிற்சியாளர் வேதனம், போக்குவரத்துச் செலவு, என்பவற்றைச் சங்கம் பொறுப்பேற்கும் எனக்கூறிய் அவர் வசதியாக விளையாடுவதற்கேற்ற முறையில் மைதானத்தை விஸ்தரிப்பதற்கும் சங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் கூறினார்.

RAAN உதவித்திட்டத்தின் மூலம் நூல்நிலையம், குடிநீர்வசதி, கணனிக்கல்வி வசதிகள் ஏற்படுத்தப்படும் எனக்கூறப்பட்டது. தண்ணீர் தாங்கி வசதி G.T.Z. உதவித்திட்டமூலம் செய்யப்பட்டதால் கல்லூரியிலிருந்து விலகிய மாணவர் நன்மை கருதி ஆறு கணனிகளையாவது வாங்கி அவர்களுக்குப் பயிற்சியளித்தல் வேண்டும். இதற்கு அதிபரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் கூறினார். எமது சங்கம் வானவில் நிகழ்ச்சியை நடாத்தியதன் மூலம் $3^1/_2$ இலட்சம் ரூபா மிகுதியாகக் கிடைத்துள்ளது. பழைய மாணவர் சங்கத்திற்கென ஒரு நிதி ஒதுக்கப்படவேண்டும். கல்லூரிக்கென 2.1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதெனக் கூறப்பட்டதால் அந்தப்பணத்தின்மூலம் 3 மாடிக்கட்டிடத்தைக் கட்டுவதற்குரிய முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். கட்டடங்கள் கட்டுவதற்கேற்ற முறையில் கல்லூரிக்கருகாமையில் உள்ள காணிகளைக் கொள்வனவு செய்தலும் சங்கம் முயற்சியெடுக்கும் எனவும் அவர் கூறினார்.

அதிபர் தமது உரையில் கல்லூரி நல்ல முறையில் இயங்குவதற்குப் பழைய மாணவர் சங்கம் உந்துசக்தியாக உதவுகின்றது என்பதை எடுத்துக் கூறினார்.

மாணவரின் கல்விமுன்னேற்றம் பற்றி அவர் தமது கருத்தைக் கூறுகையில் இப்பொழுது ஆரம்பப்பிரிவில் இருந்து மாணவருக்குப் பலவகையான முன்னேற்ற நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். ஆகையால் உடனடியாக இதன்பயனை நாம் எதிர்பாக்க முடியாது. படிப்படியாக இதன் பலாபலனை நாம் நல்ல முறையாகப் பெற்றுக் கொள்ளமுடியும் எனக் கூறினார்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் 5 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் இருவர் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். கல்விப்பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் பொறியியற் துறைக்கு 4 பேரும் வைத்தியத்துறைக்கு ஒருவரும் கணிதவிஞ்ஞான பீடத்திற்கு 4 பேரும் கலைத்துறைக்கு 8 பேருக்கு மேல் தெரிவு செய்யப்படக்கூடிய வாயப்பும் உள்ளது எனக் கூறினார்.

விளையாட்டுத்துறையில் மாகாணமட்டத்தில் இருவர் தெரிவு செய்யப்பட்டு தேசீய மட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். விளையாட்டு மைதானத்தைப் பொறுத்தவரையில் 80 மீற்றர் தூரம் ஓடக்கூடிய வசதி மட்டும் உள்ள எமது மைதானத்தில் 100 மீற்றர் ஓட்டத்தை நடாத்த வேண்டியுள்ளது. இதனால் கட்டாயம் இந்த மைதானம் விஸ்தரிக்கப்பட வேண்டும். மைதானம் நல்ல முறையிற் கண்காணிக்கப்படவேண்டும். இதற்கு ஒரு மைதானப் பொறுப்பாளர் அவசியமாக உள்ளது. இத்துடன் மைதானத்திற்கு ஒரு கதவும் போடப்படவேண்டும். இந்தத்தேவைகளைப் பழைய மாணவர் சங்கம் பூர்த்தி செய்யவேண்டும் எனவும் எடுத்துக்கூறினார்.

சாரணீயத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கான பயிற்சிகள் சாரணிய ஆணையாளர் திரு.K. செல்வநாயகம் அவர்களால் கொடுக்கப்பட்டு கல்லூரியிலுள்ள சாரணீய ஆசிரியர்களின் முயற்சியுடன் அது நல்ல முன்னேற்ற நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றது எனக்கூறினார். மாவட்ட நிலையில் 3 கேடயங்கள் எங்கள் கல்லூரிக்குக் கிடைத்துள்ளன எனப் பாராட்டிக் கூறினார்.

கல்லூரியின் 150 வது ஆண்டு நிறைவு விழா அடுத்த வருடம் 2002ல் கொண்டாடப்படவேண்டும் அதற்காகப் பாடசாலையோடு தொடர்பான வரலாற்றைப் பெற்றுத்தரவேண்டும். எனப்பலமுறை அங்கத்தவர்களிடம் கேட்டேன். இந்த உதவியை அங்கத்தவர்கள் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

பழைய மாணவர் சங்கத்திற்கும் அதிபருக்கும் நல்லுறவு நிலவ வேண்டும் அது கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும் எனக்கூறித் தம் உரையை முடித்தார்.

அடுத்துச் செயலாளரால் சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு அறிக்கை சரியெனத் திரு. S. யோகேஸ்வரன் அவர்களால் பிரேரிக்கப்பட்டு திரு.M.P. தர்மலிங்கம் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு அறிக்கை நிறைவேறியது. இதை அடுத்துப் பொருளாளரால் 2001 - 2002 ற்கான நிதி அறிக்கை வாசிக்கப்பட்டது. அறிக்கையில் ஐயப்பாடுகளுக்குப் பொருளாளரால் விளக்கம் அளிக்கப்பட்டது. அறிக்கை சரியென திரு.க. வல்லிபுரநாதன் அவர்கள் பிரேரிக்க திரு. இ. தேவராஜா அவர்கள் ஆமோதித்தார்.

இதைத் தொடர்ந்து நுண்கலைமன்ற அறிக்கை செயலாளர் M.P. தர்மலிங்கம் அவர்களால் வாசிக்கப்பட்டது. நுண்கலை மன்றத்தின் வருவாய்க்கு மேலான கொடுப்பனவுகளைப் பழைய மாணவர் சங்கமே கொடுக்கின்றது என்ற திருத்தத்துடன் அறிக்கை சரியென திரு. சீ. வடிவேல் அவர்கள் பிரேரிக்க திரு. K. வல்லிபுரநாதன் அவர்களால் வழிமொழியப்பட்டு அறிக்கை நிறைவேறியது.

மேற்படி நிகழ்வுகளுடன் 2000 / 2001 ற்கான காலம் முடிவடைந்தது. கல்லூரி அதிபர் அவர்களைத் தற்காலிகத் தலைவராகச் செயற்பட்டு 2001 - 2002 ற்கான நிர்வாக சபைத்தெரிவு ஆரம்பமானது. அத்தருணம் தலைவராக பேராசிரியர் அ. நவரத்தினராஜா அவர்கள் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் தலைமைப்பதவியை ஏற்றுக் கொண்ட பேராசிரியர் அ. நவரத்தினராஜா அவர்கள் தொடர்ந்து ஏனைய நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் படி கேட்டுக்கொண்டதற்கமைய பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். செயற் குழுவில் பாடசாலையை அண்டிய எல்லாக்கிராமங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்

படவேண்டும் என்ற நோக்கில் செயற்குழு அங்கத்தவரின் எண்ணிக்கை 15 ஆக உயர்த்தப்பட வேண்டும் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## நிர்வாக சபைத் தெரிவு

| தலைவர் | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|
| பேராசிரியர் அ.நவரத்தினராஜா | திரு.செ.யோகேஸ்வரன் | திரு.ம.பொ.தர்மலிங்கம் |
| **செயலாளர்** | | |
| திருமதி இ.தில்லையம்பலம் | திரு.பொ.குகதாசன் | திரு. சி.இராமகிருஷ்ணன் |
| **உபதலைவர்கள்** | | |
| 01. திரு.இ.முத்துரத்தினானந்தம் | திரு.S. வடிவேல் | திரு. ம.பொ.தர்மலிங்கம் |
| 02..திரு.க.சண்முகசுந்தரம் | திரு.செ.யோகேஸ்வரன் | திரு.பொ.குகதாஸ் |
| **உபசெயலாளர்** | | |
| 03. திரு.தா. மகாதேவன் | திரு.S.வடிவேல் | திரு.செ.யோகேஸ்வரன் |
| **பொருளாளர்** | | |
| 04. திருமதி.ப.அருள்வேல்நாதன் | திரு.சி.சுப்பிரமணியம் | திரு.ம.பொ.தர்மலிங்கம் |
| **நிர்வாக சபை உறுப்பினர்கள்** | | |
| 05. திரு.T.யோகசாமி | திரு.பொ.வியாகேசு | திரு.S.சிவலிங்கராஜா |
| 06. திரு.க.தணிகாசலம் | திரு.ச.தில்லையம்பலம் | திரு.வி.சோதிராஜா |
| 07. திரு.பூ.சத்திவேல் | திரு.சி.பவச்செல்வன் | திரு.S.சிவலிங்கராஜா |
| 08. திரு.சி.சுப்பிரமணியம் | திரு.ச.தில்லையம்பலம் | திரு.பொ.குகதாஸ் |
| 09. திரு.S.யோகேஸ்வரன் | திரு.S.வடிவேல் | திரு.வி.சோதிராஜா |
| 10. திரு.P.குகதாஸ் | திரு.தி.செந்தில்நாதன் | திரு.தி.யோகசாமி |
| 11. திரு.S.பரமேஸ்வரன் | திரு.தா.மாகாதேவன் | திரு.S.சுப்பிரமணியம் |
| 12. திருS.வடிவேல் | திரு.ம.பொ.தர்மலிங்கம் | திரு.பொ.குகதாஸ் |
| 13. திரு.அன்ரன்இரத்தினசிங்கம் | திரு.S.வடிவேல் | திரு.செ.யோகேஸ்வரன் |
| **கணக்காய்வாளர்** | | |
| திரு.சி.இராமகிருஷ்ணன் | திரு.சி.சுப்பிரமணியம் | திரு.க.வல்லிபுரநாதன் |

## நுண்கலை மன்ற நிர்வாக உறுப்பினர் நால்வர் தெரிவு

| | | |
|---|---|---|
| 1. திரு.ம.பொ.தர்மலிங்கம் | திரு.சி.யோகசாமி | திரு.S.சுப்பிரமணியம் |
| 2. திரு.சி. சோதிராஜா | திரு.S.பரமேஸ்வரன் | திரு.பொ.குகதாஸ் |
| 3. திரு.N.பாலசிங்கம் | திரு.மு.வல்லிபுரநாதன் | திரு.ம.பொ.தர்மலிங்கம் |
| 4. திருS. சூரியகுமார் | திரு.சு.தேவராசா | திரு.சி.தில்லையம்பலம் |

இவர்களுடன் பழைய மாணவர் செயற்குழுவிலிருந்து மூவரை அடுத்த நிர்வாகசபைக்கூட்டத்தில் தெரிவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.
கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட விடயம்

அதிபர்:- மாணவர் கல்விமுன்னேற்றத்தில் ஒவ்வொரு வகுப்பு ரீதியாகவும் நடவடிக்கை எடுத்தும் அதிகபலன் காணமுடியவில்லை. பெற்றோர் கட்டாயமாகப் பிள்ளைகள் கல்வி விடயத்தில் கவனம் எடுத்தல் வேண்டும்.

திரு.C.தவராசா:- A/L விஞ்ஞான கூடம் நூல்நிலையக்கட்டிடக் கோரிக்கைகளைக் கல்வி அமைச்சிடம் கோருதல் வேண்டும்

திரு.வி.சோதிராசா:-கல்விக்குக் கட்டாயமாக ஒருகலையரங்கம் அமைக்கப்படல் வேண்டும்

திரு.பொ.குகதாஸ்:- வெளிநாடுகளில் இருக்கும் பழைய மாணவர் களிடமிருந்து பழைய மாணவர் சங்கம் நிதி சேகரிக்க வேண்டும்

திருT.யோகசாமி:- கடந்த வருடம் 231 ஆக இருக்கும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர் தொகையைக் கூட்டுவதற்கு நடவடிக்கைஎடுக்க வேண்டும்

செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் பிபகல் 1.00 மணியளவில் நிறைவு பெற்றது

செயலாளர்
திருமதி.இ.தில்லையம்பலம்

### உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
### பழைய மாணவர் சங்கத்தின்
# பதின்மூன்றாவது ஆண்டறிக்கை

எமது பழைய மாணவர் சங்கத்தின் 2001 2002 ம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கையை இச்சபையில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உடுப்பிட்டி என்ற இக்கிராமத்தில் 1852 ல் அமெரிக்கன் மிஷனரிமாரின் முயற்சியால் உருவாக்கப்பட்டது எமது கல்லூரி. அன்று தொடக்கம் கல்வி, கலை, பண்பாடு போன்ற சகலதுறைகளிலும் மேலோங்கிப் பன்னூற்றுக்கணக்கான நன்மாணாக்கரை உருவாக்கியதோடு சர்வதேச ரீதியாக எமது ஊரையும் உயர்வடைய வைத்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இடைப்பட்ட காலத்தில் எமது கல்லூரி பல இன்னல்களை எதிர்நோக்கி இடர்பட்டு நின்றது. இந்த நேரத்தில் அதிபர் க. சிதம்பரப்பிள்ளையின் முயற்சியால் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட எமது பழைய மாணவர் சங்கம் மிக விளிப்பாகச் செயற்படத் தொடங்கியது. அன்னையின் புதல்வர்கள் அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டார்கள். கடல்கடந்த கனடாவில் ஒரு கட்டமைப்பான கிளைச்சங்கம். அந்தச்சங்கம் அன்று தொடங்கிய தனது சிறப்பான பணியை இன்று வரை தளராது ஊக்கத்தோடு செய்து வருகின்றது. அதே போன்று கொழும்பில் அமைக்கப்பட்ட எமது கிளைச்சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக நின்று ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்கின்றது. இதே நேரத்தில் உள் நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி எங்கள் பழைய மாணவர் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பெரும் ஒத்துழைப்பு நல்குகிறார்கள். இதே நேரத்தில் காலத்திற்கு காலம் வரும் அதிபர், ஆசிரியர், பெற்றோர், நலன் விரும்பிகள் யாபேரும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளனர்.

இன்று எம் கல்லூரி இழந்த தனது வளங்கள் பலவற்றை மீண்டும் பெற்று புதுப்பொலிவுடன் நூற்று ஐம்பதாவது நிறைவினை சிறப்பாக கொண்டாடியமை கல்லூரியின் வரலாற்றில் முக்கிய அம்சமாகும். கல்லூரியின் 150வது நிறைவு விழா அன்று 19-10-2002 நினைவு முத்திரை

வெளியிட்டமையும் நிறைவு மலர் வெளியிட்டமையும் இந்நிகழ்வின் சிறப்பம்சங்களாகும். இவ்விழாவில் கொழும்புகிளைச் சங்கத்தவர்கள் வருகை தந்து விழாவை சிறப்பாக நடாத்தியதோடு கனடாச்சங்கத்தவர்கள் மற்றும் வெளிநாட்டில் வாழும் பழைய மாணவர்கள் ஏனைய பழைய மாணவர்கள் பன்னூற்றுக்கணக்கான அன்பர் ஆதரவாளர்கள் பெற்றோர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மறுநாள் நடந்த பரிசளிப்பு விழாவும் மாணவர் கலை நிகழ்ச்சிகளும் மாணவர் திறமையை வெளிப்படுத்தியதோடு வருங்கால மாணவர்களைத் தூண்டும் நிகழ்சிகளாவும் அமைந்தன. இந்தவகையில் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உழைக்கும் அதிபர் K.நடராசா ஆசிரியர் ஊழியர் அனைவருக்கும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

### 01. அங்கத்தவர்கள்

எமது சபை ஆயுட்கால அங்கத்தவர் தொகை 247 ஆக அதிகரித்துள்ள தெனினும் இடைக்காலங்களில் இறைபதம் எய்தியவர் தொகை பத்தையும் நீக்கியபின் ஆயுட்கால அங்கத்தவர் தொகை 237 எனவே கொள்ள வேண்டும். ஆயுட்கால அங்கத்தவர்களைக் கூட்டும் முயற்சியில் நிர்வாக சபை உறுப்பினர் சபை உறுப்பினர் அனைவரும் முயற்சி எடுத்தால் சங்கத்தின் உயர்ச்சி மேலோங்கும்.

### 02.நிர்வாகசபைக் கூட்டங்கள்

மாதந்தோறும் இறுதிச்சனிக்கிழமைகளில் ஒரு நிர்வாகசபைக் கூட்டம் நடைபெறும். தேவை கருதி விசேட கூட்டங்களும் நடைபெறும். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக சனிக்கிழமை கூட்டம் ஒன்று நடைபெறா விட்டால் அதைத் தொடர்ந்து வரும் வசதியான நாள் ஒன்றில் நடாத்தப்படும். இந்த வகையில் இந்தக்காலப்பகுதியில் 11 நிர்வாக சபைக் கூட்டங்களும் 02 விசேட நிர்வாகசபைக் கூட்டங்களுமாக மொத்தம் 13 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### நிர்வாகசபை அங்கத்தவர் வரவு விபரம்

| அங்கத்தவர்பெயர் | கூட்டஎண்ணிக்கை | பங்குபற்றியகூட்டஎண்ணிக்கை |
|---|---|---|
| 01. பேராசிரியர் அ.நவரத்தினராஜா | 13 | 08 |
| 02. திரு.இ.முத்துரத்தினானந்தம் | 13 | 10 |
| 03. திரு.க.சண்முகசுந்தரம் | 13 | 08 |

| | | |
|---|---|---|
| 04. திரு.தா.மகாதேவன் | 13 | 08 |
| 05. திரு.சி. சுப்பிரமணியம் | 13 | 10 |
| 06. திரு.தி.யோகசாமி | 13 | 11 |
| 07. திரு.பொ.குகதாசன் | 13 | 07 |
| 08. திரு. செ.யோகேஸ்வரன் | 13 | 07 |
| 09. திரு.சி.வடிவேல் | 13 | 12 |
| 10. திரு.பூ.சத்திவேல் | 13 | 06 |
| 11. திரு.S.பரமேஸ்வரன் | 13 | 06 |
| 12. திரு.செ.அ.ரத்தினசிங்கம் | 13 | 05 |
| 13. திரு.க.தணிகாசலம் | 13 | 09 |
| 14. திருமதி ப.அருள்வேல்நாதன் | 13 | 12 |
| 15. திருமதி இ.தில்லையம்பலம் | 13 | 11 |

**03. கனடாக்கிளைச் சங்கம்**

இன்று எமது கல்லூரி தலை நிமிர்ந்து கல்வி, கலை, விளையாட்டுத்துறைகளில் எமது மாணவர் முன்னேற்றம் காண்பதற்குக் கனடாக்கிளையின் ஆக்கமும் ஊக்கமும்தான் அடிப்படைச்சத்தியாக அமைந்தது. என்பதை எமது கல்விச்சமுதாயம் என்றும் மறுக்கமுடியாது. குறையாத நீரூற்றாய்க் கல்லூரியின் தேவையறிந்து காலத்திற்கு காலம் இச்சங்கம் அனுப்பும் பணம் பல்வகைப்பட்ட தேவைகளையும் பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுவது எல்லோரும் அறியப்பட வேண்டிய தொன்றாகும்.

1989ம் ஆண்டிலிருந்து 2002 வரை இச்சங்கம் அனுப்பியபணம் 41,96,951 ரூபாவாகும் இப்பணத்தில் மகளிர் . கல்லூரிக்கு 18,72,310 கொடுக்கப்பட்ட எமது சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது 23,24,641 ரூபா இந்தப் பணம் தேவைகளுக்குக்கேற்ப நிரந்தர சேமிப்பு நடைமுறைக்கணக்குகளில் இடப்பட்டு செலவு செய்யப்படுகிறது. கல்வித்தேவ்வகளைப் பொறுத்தவரை கல்வி ஊக்குவிப்பு பயிற்சிச சாதனங்கள் வாங்குதல் பற்றாக்குறை ஆசிரியரை நியமித்து வேதனம் வழங்கள், மாணவர் ஊக்குவிப்புப் பரிசில் வழங்கல் போன்ற துறைகளில் பணம் செலவு செய்யப்படுகிறது. இன்று ஆரம்பப்பிரிவில் 5 ஆசிரியர் மாதம் 1000ரூபா படி வேதனம் கொடுக்கப்பட்டுக் கடமையாற்றுகின்றனர்.

மேற்பிரிவில் மாதம் 2000 ரூபா வேதனத்தில் ஆங்கில பாடத்திற்கு ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். வருடந்தோறும் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் நினைவுப்பரிசில்கள் பரிசளிப்பு விழாவில்

புத்தகப்பணப்பரிசில்கள் என்பன மாணவரை ஊக்குவிக்குமுகமாகக் கொடுக்கப்படுகின்றன.

**விளையாட்டுத்துறை**

இத்துறையைப் பொறுத்தவரை கனடாக்கிளைச் சங்கத்தின் உதவி அளப்பரியது. கல்லூரியில் உள்ள சகல விளையாட்டுத்துறை மாணவர்க்கும் ஊக்கத்தை அளிப்பதற்கும் அவர்கள் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றுவதிலும் சங்கம் கண்ணும் கருத்துமாக உள்ளது.

மாணவர் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல் போக்குவரத்துச் செலவுகளைப் பொறுப்பேற்றல் பயிற்சியாளர்களை நியமித்து வேதனங் கொடுத்தல் என்பவற்றிற்காகச் சங்கம் பெருந்தொகைப்பணத்தை வருடந் தோறும் செலவு செய்கின்றது. தேவையேற்படும் போது துடுப்பாட்ட பயிற்சி கொடுக்கும் ஆசிரியர் மாதம் 3000 ம் வேதனத்தில் அமர்த்தப்படுகிறார். இந்த வகையில் இக்கால இடைப்பகுதியில் சங்கம் 1லட்சத்தி 20ஆயிரம் ரூபாவை விளையாட்டுத்துறைக்குச் செலவு செய்துள்ளது.

**சாரணீயம்**

கனடாக்கிளையைப் பொறுத்த வரையில் கிளையில் அங்கத்துவ மாணவர் பலர் தங்கள் காலத்தில் கல்லூரி எப்படிச் சாரணீயத்துறையில் முதன்மை பெற்று விளங்கியதோ அதேபோன்று தொடர்ந்தும் அத்துறை வளர்ந்து வரவேண்டும் என்னும் நோக்குடையவர்களாக உள்ளனர். இதன்காரணமாகச் சாரணீயத்துறைக்கு வேண்டிய சகலமுக்கிய உதவிகளையும் தாய்ச்சங்கத்தினூடாகச் செய்கின்றனர். இந்தமுறை காலியில் நடைபெற்ற சாரணீயப்பாசறைச் செலவுகளில் பெரும் பகுதி அதாவது 46ஆயிரம் ரூபாவரை சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

கனடாக்கிளை எமது தாய்ச்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவரத்தினராஜா அவர்களைத் தமது வானவில் நிகழ்விற்கு அழைத்து கௌரவித்ததுடன் கல்லூரி தொடர்பான நிறைவுகள் குறைகள் தேவைகள் என்பவற்றை நேரடியாக எல்லோருக்கும் தெளிவுபடுத்தி அறிவதிலும் ஆர்வத்தைக் காட்டியமை சங்கம் கல்லூரியின் விடயத்தில் எடுக்கும் மிக்க கவனத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

## காணிக் கொள்வனவு

கனடாக்கிளைச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று கல்லூரியைச் சூழவுள்ள காணிகளை இயன்றவரையிற் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்தல் ஆகும். கல்லூரிக்கு வேண்டிய கட்டடங்களை அரசோ அல்லது வேறு ஸ்தாபனங்களோ கட்டுவதற்கு முன் வரலாம். காணி அப்படி கொள்வனவு செய்யமுடியாது. அதே நேரத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தாலும் போதிய காணி வசதியின்மையால் அவற்றைக் கட்டுவதற்குத் தடங்கல் ஏற்படலாம். இந்தக்காரணத்தால் கல்லூரியின் ஏனைய முக்கிய தேவைகளையும் பூரணப்படுத்திக் காணிக் கொள்வனவு செய்வதில் பணத்தினை ஒதுக்குவதற்குச்சங்கம் தங்களால் எந்தெந்த நல்லவழிகளிலெல்லாம் பணத்தைக் கல்லூரிக்காக ஈட்டமுடியுமோ அந்த முயற்சியை எல்லாம் அரும்பாடுபட்டுச் செய்து வருகின்றது. சங்கத்தின் நோக்கத்தில் இந்தமுறை ஒருபகுதி நிறைவேறியுள்ளது. கல்லூரிக்குத் தெற்காக உள்ள 2பரப்புக் காணியும் வீடும் திரு.நடராசா ராஜ்குமாரிடமும் பெண் கமலாசினியிடமு மிருந்து ரூபா 6லட்சத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

காணிக்குரியவர்கள் வெளிநாட்டில் இருக்கின்ற காரணத்தால் பெண்ணின் தாயாராகிய திருமதி அப்பாத்துரை பூரணம் என்பவர் பெயரில் தத்துவம் வழங்கப்பட்டு 2002ம் ஆண்டு 10ம் மாதம் 9ம் திகதி சட்டத்தரணி அ.க.நடராஜாவினால் 8556ம் இலக்க உறுதி எழுதப்பட்டுள்ளது. செலவு தொகைகள் உட்பட ஆறு இலட்சத்து முப்பது ஆயிரம் ரூபாய் இதற்காகச் சங்கத்தால் செலவு செய்யப்பட்டுள்ளது. இக்காணிக் கொள்வனவு விடயத்தில் முன்னின்றுழைத்த எமது நிர்வாக சபை உறுப்பினர் கி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

## உறுப்பினரின் உண்மையான ஈடுபாடு.

கனடாக்கிளைச் சங்கத்தினர் கல்லூரிக்காகக் கனடாவில் இருந்து உழைப்பதோடு மட்டுமன்றி நேரடியாகக் கல்லூரியின் நிலைப்பாடுகளைக் காண்பதற்காக பலவித வசதியீனங்கள் மத்தியிலும் மிகுந்த ஆர்வத்துடன் கல்லூரிக்கு வருகை தந்து அதிபர் ஆசிரியர் மாணவரோடு அளவளாவி நிகழ்ச்சிகளிலும் கலந்து புகைப்படங்கள் ஒலிப்பதிவுகள் என்பவற்றை ஆர்வத்துடன் செய்வதும் மிகப் போற்றுவதற்குரியது ஒன்றாகும்.

இந்தவகையில் திரு.V. சொர்ணலிங்கம் அவர்கள் தமது குடும்பத்துடன் வருகை தந்து கல்லூரியின் குறைநிறைகள் தேவைகள் என்பவை பற்றி கல்லூரி சார்ந்தவர்களுடன் நல்லுரையாடல் நடாத்தியமையும் நுண்கலைமன்ற நிகழ்விற்குத் தலைமைதாங்கி நல்லுரை நிகழ்த்தியமையும் போற்றுவதற்குரியதாகும். இச்சந்தர்ப்பத்தில் அங்கத்தவர்களின் வேண்டுதலை மதித்து தமது புத்திரியின் நல்ல ஒரு இசை நிகழ்ச்சியை அளித்து எல்லோரது பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடுதற்குரியது இதே நேரத்தில் கல்லூரியின் முன்னேற்றத்திற்காக அவர் எந்த உதவியையும் செய்வதற்கு மனமுவந்து முன்னிப்பதாகக் கூறியமை மகிழ்ச்சிக்குரியது. இதே போன்று கனடாக்கிளை உறுப்பினர் திரு.M. மகாலிங்கம் அவர்களும் கல்லூரிக்கு வந்து நூற்றம்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடற்குரியது. நூற்றம்பதாவது நிறைவு விழாவுக்கு வேண்டிய பண உதவியாகக் கனடாக்கிளைச் சங்கம் ரூபா 50000ஆயிரம் கொடுத்துள்ளதோடும் ஆசிச் செய்திகள் கல்லூரியோடு தொடர்பான ஆக்கங்களையும் கொடுத்து மலரினையும் நிறைவு செய்துள்ளது.

**கொழும்புக்கிளைச்சங்கம்**

கல்லூரியின் வளர்ச்சிக்காக இச்சங்கம் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. வறியமாணவர்களை இனங்கண்டு வருடந்தோறும் அவர்களுக்கு தலா 500ரூபா வீதம் சேமிப்புப்புத்தகம் ஒன்றில் வைப்பிலிட்டுக் கொடுப்பதன் மூலம் அவர்கள் கல்வி முன்னேற்றத்திற்கு வழிசெய்யப்படுகிறது. இதற்காக இந்தவருடம் 8000ம்ரூபா சங்கத்தினால் வழங்கப்பட்டது. அடுத்ததாக ஐந்தாம் ஆண்டுப்புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள் அவர்களைக் கற்பிக்கும் ஆசிரிய ஆசிரியைகளைப் பாராட்டிக் கௌரவிப்பதன் மூலம் தொடர்ந்து வரும் மாணவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் 2001 ம் ஆண்டில் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களுக்கு ஐவருக்கு ரூபா 500வீதம் வங்கிக்கணக்கில் வைப்பிலிட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டதோடு ஐந்தாம் நான்காம் வகுப்பு ஆசிரியர் மாணவர்களையும் உள்ளடக்கி ஒரு பாராட்டு விழாவும் 10-04-2002 நடாத்தப்பட்டது.

இத்துடன் பேராசிரியர் நினைவுப்பரிசாக ரூபா 3000ம் K.T.யோன் நினைவுப்பரிசாக ரூபா3000 ம் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இந்தவகையில் மொத்தமாக ரூபா 19000 ஆயிரம் மாணவர்

கல்விமுன்னேற்றம் கருதிச்சங்கத்தினால் இவ்வருடம் அனுப்பப்பட்டமை குறிப்பிடுதற்குரியது.

கல்லூரியின் ஏனைய தேவைகளும் இந்தச்சங்கத்தினால் கவனிக்கப்பட்டு வருகின்றன. கல்லூரி வைபவங்களின் போது வாடகைக்கே ஒலிபெருக்கி இதுவரை உபயோகிக்கப்பட்டு வந்தது. இந்தத் தேவையின் முக்கியத்துவம் அறிந்து சங்கம் கல்லூரிக்கென ஒலி பெருக்கி சாதனங்களை அனுப்பி உதவியுள்ளமை கல்லூரியின் வளர்ச்சியில் சங்கம் கொண்டுள்ள அபிமானத்தை எடுத்துக்காட்டுகிறது. இன்னும் இச்சங்கத்தின் மூலம் கல்லூரிக்குப் பலதேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. சாரணர் பாசறைக்குச் சென்ற மாணவர் ஆசிரியருக்கு வேண்டிய சகலஉதவிகளையும் உபதலைவர் கந்தையா நீலகண்டன் அவர்களே செய்து கொடுத்துள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் நூற்றைம்பதாவது நிறைவு தினவிழாவுக்கு வேண்டிய முன் ஆயத்தங்கள் பல இச்சங்கத்தால் மேற் கொள்ளப்பட்டமை போற்றுதற்குரியது. கல்லூரி நினைவு முத்திரை மாதிரி ஆக்கம் வெளியீடு மற்றும் நினைவுமலர் ஆக்கம் வெளியீடு என்பவற்றில் இச்சங்கம் பெரும்பங்கு ஆற்றியதோடு அங்கத்தவர்பலர் வருகை தந்து விழாவினைச் சிறப்பாக நடாத்தியமையும் கல்லூரியின் மேல் இவர்கள் கொண்ட ஆழ்ந்த பற்றை வெளிப்படுத்துகிறது.

**கல்வி அபிவிருத்தி**

எமது சங்கத்தைப் பொறுத்தவரையில் கல்லூரி மாணவரின் கல்வித்தரத்தை உயர்த்தி மாணவர் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. அதற்காகப் பயிற்சிப்பரீட்சைகள் மேலதிக ஆசிரியர்கள் நியமனம் போன்றவற்றிற்கான பண உதவியும் சிறந்த பெறுபேற்றைப்பெறும் மாணவர்களைக் கௌரவிப்பதன் மூலம் ஏனைய மாணவர்களை ஊக்குவிப்பதற்கான விழாக்களை ஒழுங்குபடுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதனால் இந்தவருடம்

5ம் ஆண்டுப்புலமைப்பரிட்சையில் 5 மாணவர்

க.பொ.த.ச.தரப்பரீட்சையில் 41மாணவர் A/L தகுதி

க.பொ.த.உயர்தரம்பொறியியற்பீடம் 04 மாணவர்

மருத்துவப்பீடம் 01 மாணவர்

பௌதிக விஞ்ஞானம்04 மாணவர்
கலைத்துறை 04 மாணவர்
தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடுவதற்குரியது.

**விளையாட்டுத்துறை**

எமது சங்கம் மாணவர்களின் விளையாட்டுத்துறை முன்னேற்றத்திலும் உயர்ந்த கவனம் செலுத்துகின்றது. விளையாட்டு உபகரணங்களுக்குரிய செலவு போட்டிகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு பயிற்சியளிக்கும் மேலதிக ஆசிரியர்களுக்கான வேதனம் வெற்றி பெறும் மாணவர்களுக்குப் பரிசளித்தல் போன்ற ஊக்குவிப்புக்கள் அனைத்தும் மேற் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக பலவருடங்களாக இடைநிறுத்தப்பட்ட துடுப்பாட்டம் பழைய மாணவர் சங்க முயற்சியினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 13,15,19, வயதுப்பிரிவினர் வலய மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. துடுப்பாட்டத்திற்கு வேண்டிய பெருநிதியைப் பழைய மாணவர் சங்கம் கொடுத்தமையால் 17 வயதுப்பிரிவினையும் படிப்படியாகக் கல்லூரியில் ஆரம்பிக்கும் நிலை காணப்படுகிறது.

உதைபந்தாட்டத்தில் 14 வயதுப்பிரிவினர் வலய மட்டத்தில் 3ம் இடத்தையும் கரப்பந்தாட்டத்தில் 19,17,15, வயதுப்பிரிவினர் 1ம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை பெருமையுடன் குறிப்பிடுவதற்குரிய தொன்றாகும். இத்துடன் 13 வயது 21வயதுப்பிரிவில் ஒவ்வொருவர் தேசியமெய்வல்லுனர் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

**சாரணீயம்**

இன்று கல்லூரியில் சாரணீயம் படிப்படியாக உயர்ச்சி பெற்று வருவதற்குப் பழைய மாணவர் சங்கப் பங்களிப்பு முக்கியமானதாகும். சாரணீயத்தோடு தொடர்பான செலவினங்களின் பெரும்பங்கைச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது. அண்மையில் காலியில் இடம் பெற்ற சாரணீயப்பாசறைக்கு செல்லும் சாரணர்களுக்குரிய செலவின் பெரும்பங்கு சங்கத்தாலேயே வழங்கப்பட்டது. இந்தப்பாசறை நிகழ்வின் நல்வழிகாட்டியாக மாகாண ஆணையாளர் திரு.கொ.செல்வநாயகம் அவர்கள் செயற்பட்டார்கள். கல்லூரிச்சாரண ஆசிரியர் திரு.சி. நாகேந்திரனும் ஏனையவர்களும் மாணவரை நல்முறையில் செயற்படுவதற்கு வழிகாட்டினார்கள். காலிப்பாசறை நிகழ்வுப் போட்டியில்

எமது மாணவர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை சங்கத்திற்கும் கல்லூரிக்கும் பெருமைக்குரிய தொன்றாகும். மேலும் பல மாணவர் சாரணீயத்தில் இணைத்து செயற்படுவதற்கு எமது சங்கம் உதவியளிப்பதற்கு ஊக்கமாக உள்ளது.

### பேராசிரியர் நினைவுதினம்

வழமையாகக் கொண்டாடப்படும் பழைய மாணவர் முன்னாள் சங்கத்தலைவரும் ஸ்தாபகருமாகிய பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் 8வது நினைவஞ்சலிக்கூட்டம் இவ்வருடம் ஆனிமாதம் 11ம் திகதி சங்கத்தலைவர் பேராசிரியர் அ.நவரத்தினராஜா அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது.

இவ்விழாவில் யாழ் மருத்துவப்பீடப் பேராசிரியர் S.பரமேஸ்வரன் சிறப்பு விருந்தினராக வருகை தந்தார். இவரால் உயர்கல்விச் சீர்திருத்தம் என்ற தலைப்பில் பேருரை நிகழ்த்தினார். பேராசிரியர் நினைவுப்பரிசாக யாழ் மாவட்டத்தில் கணிதத்துறையில் முதலாவது இடத்தைப் பெற்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன் ஜெ.குருபரனுக்கு ரூபா 5000 ம் வழங்கப்பட்டது. எமது கல்லூரியில் கணிதத்துறையில் 3A பெற்று முதலாம் இடத்தைப் பெற்ற சு.சுதாகரனுக்கு ரூபா 7500 நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. இந்த விழாவில் எமது பழைய மாணவரும் தற்போது அமெரிக்காவில் மண்பொறியியற்றுறை சார்ந்த கலாநிதி மு.குகனேந்திரா கலந்து உணர்வு பூர்வமாகப் பேராசிரியர் படத்திற்கு மலர்மாலையணிந்து அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடுதற்குரியது. இந்தவிழாவினை எமது சங்கம் வருடம்தோறும் நடாத்துவதன் மூலம் எமது பழைய மாணவர் பெருமை ஆளுமை சேவை என்பவற்றைப் போற்றுவதோடு கல்லூரித்தாயை என்றும் நினைவு கூரவும் வழிசெய்கின்றது.

### பரிசளிப்பு விழா

மேற்படி விழா 20-10-2002 கல்லூரியில் சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவரும் மனிதவள அபிவிருத்திக்கல்வி மேலதிகச் செயலாளரும் ஆகிய உடுவை எஸ். தில்லைநடராசா அவர்கள் வருகை தந்தார். தமது சிறப்புரையில் இக்கல்லூரியில் தான் பெற்ற அனுபவங்களே தன் இன்றைய வளர்ச்சிக்குக் காரணம் என்பதையும் கல்லூரியின் வளர்ச்சிக்காகத்தான் இயன்ற உதவிகள் செய்யத்தயாராக இருப்பதாகவும் கூறினார்.

பரிசிளிப்பு விழாவில் மாணவர்களின் கல்வி, கல்விசார், திறமைகளைப் பாராட்டு முகமாகப்பழைய மாணவர் சங்கத்தினால் பின் வருவோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

1. ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில்

| | |
|---|---|
| 1. செல்வன் த.திப்சன்னா | 2. செல்வன் அ.சஜீவன் |
| 3. செல்வன் த.றமேஷ் | 4. செல்வன்மு.சண்முகம் |
| 5. செல்வன் வி. சுபராஜ் | தலா 500x5=2500 |

2001 க.பொ.த.சாதாரணம் சிறந்த பரீட்சைப் பெறுபேறு
செல்வன் ஆ.செந்தூரன் -1000

க.பொ.த.உயர்தரம்
செல்வன் சு.சுதாகரன் - 1000
செல்வன் சு. ஜீவநாத் - 1000

மிகச் சிறந்த பாடசாலை மாணவன்
ஆரம்பப்பிரிவு:-
செல்வன் த.திப்சன்னா - 500

கனிஷ்ட இடைநிலைப்பிரிவு
செல்வன் சி.சுரேஷ் - 750

சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு
செல்வன் நோயல் விஜயரூபன் - 1000

ரூபா 7750 காசுப்பரிசாக வழங்கப்பட்டது.

இத்துடன் சிறந்த உதைபந்தாட்ட வீரர்
சிறந்த கரப்பந்தாட்ட வீரர்
சிறந்த துடுப்பாட்ட வீரர்
தடகளப் போட்டி சிறந்த வீரர் ஆகியவர்களுக்கு வலய மட்ட கணிதவிஞ்ஞானப்போட்டி முதல் மாணவர்
சிறந்த சாரணர் - செல்வன் ஜெ.ஜெயப்பிரகாஷ்
ஆகியவர்களுக்கும்

பாடரீதியாக ஒவ்வொரு வகுப்பிலும் முதற்புள்ளி பெற்ற மாணவர்களுக்கும் புத்தகப் பரிசாகவும் மொத்தம் 16500 ரூபாவிற்குப் புத்தகப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் கல்லூரி மாணவர்களின் பல்வகையான நிகழ்ச்சிகள் அவர்கள் ஆற்றலை வெளிப்படுத்தியதோடு ஏனைய மாணவர்களுக்கு ஊக்கம் கொடுப்பனவாகவும் அமைந்தன.

**நுண்கலை மன்றம்**

எமது சங்கத்தின் ஒரு பிரிவாகிய நுண்கலைமன்றம் எமது சிறார்களின் கலை ஆர்வத்தை வளர்ப்பதற்கு முன்னின்றுழைக்கிறது. வருமான நோக்கத்தைக் கொள்ளாது கலைவளர்ச்சியையே நோக்கமாக கொண்ட இம்மன்றத்தின் மேலதிகச் செலவுகள் எல்லாம் பழைய மாணவர் சங்கமே கொடுத்து உதவுகின்றது. ஆனி மாதத்தில் நடைபெற்ற இந்த நுண்கலைமன்றக் கலைவிழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கனடாக்கிளை உறுப்பினர் திரு.V. சொர்ணலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து தமது குடும்பத்துடன் விழாவைச் சிறப்பித்ததோடு மன்றத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியமை அவர் பிரதேசக்கலை வளர்ச்சியில் கொண்ட பற்றினை எடுத்துக்காட்டியது.

**கல்லூரியின் நூற்றைம்பதாவது நிறைவு தினவிழா**

இவ்விழா 19-10-2002 ல் பழைய மாணவர் சங்சத்தலைவர் பேராசிரியர் அ.நவரத்தினராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பழைய மாணவர் கொழும்புக்கிளைச் சங்கம் கல்லூரி அதிபர் ஆசிரியர் மாணவர் நலன்விரும்பிகள் பலர் அனுசரணையுடன் நடைபெற்ற இவ்விழாவில் மேன்மை தங்கிய உயர்நீதியரசர் க.விக்கினேஸ்வரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இவ்விழாவில் கல்லூரி நினைவு முத்திரை வெளியீடும் முக்கிய சிறப்பம்சங்களாகும் இவ்விழாவில் கொழும்புக்கிளைச் சங்கத்தலைவர் பலர்கலந்து விழாவினை மேலும் சிறப்படைய வைத்தனர்.

**ஏனைய விடயங்கள்**

1. பழைய மாணவர் சங்கப் பொருட்கள் பாதுகாப்பாக வைத்து எடுக்கப்படவேண்டும். என்பதற்காகச் சங்கத்தின் பணத்தில் 8000ம் ரூபாவிற்கு ஒரு இரும்பு அலுமாரி வாங்கப்பட்டுள்ளது.

2. தற்போது வாங்கப்பட்டுள்ள கட்டடத்தின் ஒரு அறையில் இந்த அலுமாரி வைத்துப்பாதுகாப்பதோடு சங்கம் தொடர்பான கூட்டங்கள் நடாத்துவதற்கும் இந்த அறையைப் பயன்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. எமது பழைய மாணவரும் கொழும்புச் சங்க உறுப்பினருமான Dr. உமாபதிசிவம் அவர்கள் கல்லூரி மைதானத்திற்குரிய கதவினைச்

செய்வதற்கு முன்வந்து 5000ம் ரூபா முற்பணமாகவும் கொடுத்துதவியுள்ளார்.

கல்லூரிக்கு வேண்டிய காணிப்பற்றாக்குறையை ஓரளவுக்கு நிறைவு செய்வதற்கு விருப்பம் தெரிவித்த இவர் கல்லூரியைச் சூழ உள்ளவர் யாராவது காணிக்குப்பதிலாக வேறுகாணி பெற விரும்பினால் அதற்குச்சமமான பெறுமதியுள்ள காணியைத்தாம் கொடுப்பதற்கோ அல்லது குறிப்பிட்டளவு பெறுமதிக்குட்பட்ட பணத்தைக் கொடுப்பதற்கோ தாம் தயாராக உள்ளதாக விருப்பம் தெரிவித்துள்ளார்.

**நன்றி**

எதிர்வரும் காலங்களிலும் எமது சங்கம் கல்லூரியின் வளர்ச்சிக்காகக் குறைகளைத்தவிர்த்து நிறைவுகளையே நோக்கமாக கொண்டு கல்லூரியின் வளர்ச்சியே எமது குறிக்கோள் என்ற நோக்குடன் செயற்படவேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். இதுவரை எல்லாவிடயங்களிலும் ஒத்துழைப்பு தந்த அனைவருக்கும் நன்றி.

**திருமதி இ.தில்லையம்பலம்**
செயலாளர்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

பழைய மாணவர் சங்க

# நுண்கலை மன்றம்

## 2001 - 2002ற்கான ஆண்டறிக்கை

எமது நுண்கலை மன்றத்தின் 2001/2002க்கான ஆண்டறிக்கையை இச்சபையின் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இக் நுண்கலை மன்றமானது இக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஒரு பிரிவாக மாணவ மாணவிகளின் நன்மை கருதி பல வருடங்களாக சங்கத்தின் யாப்பு விதிகளுக்குஅமைய பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர்.பேராசிரியர். திரு.அ.துரைராஜா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இம்மன்றத்தினால் வாய்பாட்டு, நடனம், மிருதங்கம், ஆகிய வகுப்புக்கள் நடத்தப்பட்டு வடஇலங்கைச் சங்கீதசபையால் நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றச் செய்து அவற்றிற்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வளங்கப்பட்டு வருகிறன. அத்துடன் நில்லாமல் மாணவ மாணவிகளின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கான கலைவிழாவும் வருடாவருடம் நடாத்தப்பட்டு வருகிறது.

இம்மன்றத்தின் நிர்வாகசபைத் தெரிவு வருடாவருடம் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தின் போது 3 உறுப்பினர்கள் பழைய மாணவர் சங்கத்தில் இருந்து 4 உறுப்பினர்கள் பொதுச்சபையிலிருந்தும் தெரிவு செய்யப்படும். பழைய மாணவர் சங்க செயலாளர் பதவி வழியாக மன்றப் பொருளாளராகச் செயற்படுவார்.

2001-2002 ற்கான நுண்கலை மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபின் 15-12-2002 சனிக்கிழமை பி.ப. 3.35 மணியளவில் 2002 ஆம் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் திரு.அ.நவரட்ணராசா அவர்களின் தலைமையில் ஏற்று நடத்திவைக்குமாறு முன்னைய செயலாளர் எம்.பி.தர்மலிங்கம் அழைப்பிற்கு இணங்கி தெரிவினை நடத்தி வைத்தார்கள

தலைவர்:-திரு.தி.யோகசாமி

முன்மொழிந்தவர் - எம்.பி.தர்மலிங்கம்

வழிமொழிந்தவர் - எஸ். சூரியகுமார்

செயலாளர்:- திரு.எம்.பி.தர்மலிங்கம்
முன்மொழிந்தவர் - V.சோதிராஜா
வழிமொழிந்தவர் - எஸ். சூரியகுமார்

பொருளாளர்:- திருமதி ஆர் தில்லையம்பலம்
(பதவி வழியாகத் தெரிவு செய்யப்பட்டது)

நிர்வாக சபை உறுப்பினர்கள்
திரு.கே.தனிகாசலம் (ப.மா.சங்க நிர்வாகத்திலிருந்து)
திரு.வீ.சோதிராசா (பொதுச்சபையிலிருந்து)
திரு.எஸ்.சூரியகுமார் (பொதுச்சபையிலிருந்து)
திரு.எம்.பாலசிங்கம் (பொதுச்சபையிலிருந்து)

## நுண்கலைமன்றச் செயற்பாடுகள்

நுண்கலை மன்ற நடன ஆசிரியை செல்வி சுகதா கொழும்பு சென்றமையால் எம் மன்ற பழைய ஆசிரியையான திருமதி க.நாகேந்திரம் அவர்களை தற்போதைய ஆசிரியை செல்வி துர்க்கா கதிர்காமசேகரத்துடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சங்கீத வகுப்புக்கும் தற்போதைய ஆசிரியையான செல்வி தயாளினி துரைசாமியுடன், திருமதி விமலாதேவி இராசேந்திரன் அவர்களை செயற்படுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு மிருதங்கங்கள் பழுதடைந்து இருந்து திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

## நுண்கலைவிழா

இவ்வருடம் யூலைமாதம் 7ம் திகதி இப்பாடசாலையின் ப.மா.சங்க கனாடக்கிளை ஆலோசகர் திரு.V.சொர்ணலிங்கம்அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள். மன்றத்தலைவர் தலைவராக இருந்தார்கள். அதிபர் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாணவ, மாணவியரின் நடனம்,வாய்பாட்டு, மிருதங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் மூலம் தம் திறமையைப் பெற்றோர்க்கும் சபையோருக்கும் காட்டி மகிழ்ந்தார்கள். அத்துடன் சித்தியடைந்த மாணவ மாணவியர்க்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இவ்விழாவில் விசேட நிகழ்வாக கனடாவில் இருந்து வருகை தந்த சொர்ணம் சகோதரிகளின் இன்னிசை நிகழ்வும் செயலாளரின் வேண்டுகோளின் பெயரில் இடம்பெற்றது. முடிவில் மன்றச் செயலாளர் அனைவருக்கும் நன்றியுரை கூறி இனிது நிறைவு செய்து வைத்தார்.

மீண்டும் இப்பழைய மாணவர் சங்கம் திறம்பட இயங்க உறுதுணையாக இருக்கும் கனடாக்கிளைக்கும், கொழும்புக்கிளைக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு இப்பழைய மாணவர் சங்கத்திற்கும் என்னுடன் இணைந்து செயற்பட்ட மன்ற நிர்வாக சபை உறுப்பினர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்

***எம். பி. தர்மலிங்கம்***
*மன்றச் செயலாளர்*

யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தால் நடாத்தப்படும்
நுண்கலை மன்றத்தின்
1-7-2001 தொடக்கம் 30-6-2002 வரையான

# வரவு செலவுக் கணக்கு

| மாதம் | பற்றுச்சீட்டு இல. | வரவு ரூ. ச. | செலவு ரூ. ச. |
|---|---|---|---|
| யூலை | 1483 - 1497 | 800. 00 | |
| ஆகஸ்ட் | 1498 - 1531 | 1825. 00 | |
| செப்ரெம்பர் | 1532 - 1541 | 575. 00 | |
| ஒக்ரோபர் | 1542 - 1589 | 2450. 00 | |
| நவம்பர் | 1590 - 1600 | 725. 00 | |
| டிசம்பர் | 1601 - 1643 | 2350. 00 | |
| 2002 | | | |
| ஜனவரி | 1644 - 1676 | 1925. 00 | |
| மார்ச் | 1677 - 1721 | 2425. 00 | |
| ஏப்ரல் | 1722 - 1730 | 450. 00 | |
| மே | 1731 - 1766 | 1900. 00 | |
| யூன் | 1767 - 1809 | 1550. 00 | |
| வங்கியில் இட்டதொகை (ப.மா.ச. நடைமுறைக் கணக்கில்) | | | 17750. 00 |
| கையிருப்பு (காசாக) | | | 25. 00 |
| | | 17775. 00 | 17775. 00 |

1.7.2001-30.6.2002 வரையான நுண்கலைமன்றத்தின் கணக்குகள் சரியானவையென உறுதிப்படுத்துகிறேன்.

திருமதி இ. தில்லையம்பலம்
நு.க.ம. பொருளாளர்

1.7.2001-30.6.2002 வரையான நுண்கலைமன்றத்தின் கணக்கு விபரங்கள் யாவும் சரியானவையென தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒப்பம்) சி. இராமகிருஷ்ணன்
கணக்கு ஆய்வாளர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் க

2001 யூலை தொடக்கம் 2

வரவு செலவுச

## *வரவு*

| | | |
|---|---|---|
| 1. 01-07-2001 இல் கையிருப்பு வங்கி | 20518.60 | |
| காசு | 15039.25 | 35557.85 |
| 2. நுண்கலை மன்ற சேமிப்பாக கிடைத்ததை இலங்கை வங்கி நடைமுறைக்கணக்கில் இட்டது | | 20250.00 |
| 3. வானவில் நிகழ்ச்சி Ticket விற்றது + விளம்பரத்தால் கிடைத்த தொகை | | 443770.00 |
| 4. இலங்கை வங்கியில்காசோலை காசாகமாற்றியது | | 20000.00 |
| 5. H.N.B.யில் மகளிர்கல்லூரிக்காக எடுத்ததொகை | | 250000.00 |
| 6. பரிசளிப்பு விழா முடிந்தபின் இ.வ.போட்டது | | 17000.00 |
| | | 786577.85 |

மிஷன் கல்லூரி பழைய மாணவ சங்கம்

## கம் 2002 யூன் வரைக்குமான

## சலவுக் கணக்கு

### செலவு

| | |
|---|---|
| பாடசாலை அபிவிருத்திக்காக யாழ் செயலகம்சென்ற பிரயாணச்செலவு | 1500.00. |
| நூலகப் புத்தகம் பழுது பார்ப்பு செலவு | 12464.00 |
| 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஊக்குவிப்பு செலவு | 12802.00 |
| பாடசாலைத் தேவைக்கான ஆசிரியர் வேதன உதவுதொகை | 21000.00 |
| சங்கத்திற்கான காகிதாதிகள் + முத்திரை + தொலைபேசிச்செலவு | 1959.00 |
| பாடசாலை விளையாட்டுத்துறைச் செலவு | 66252.00 |
| சாரணீயத்திற்கான உதவு தொகை | 2250.00 |
| பேராசிரியர் நினைவுப் பரிசு (வெளிமாவட்டம்)து.குருபரன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர் மாவட்டத்தில் Iவது | 5000.00 |
| உடுப்பிட்டி A.M.C. முதல் மாணவன் S.சுதாகரனுக்கு பேராசிரியர் பரிசு பழைய மாணவர் சங்கத்தாரின் பரிசாக கொடுத்தது | 7500.00 |
| கூட்ட ஒழுங்கு + நுண்கலைமன்ற உதவியாளர் M.பாலசிங்கத்திற்கு | 8250.00 |
| பொதுக்கூட்டத்திற்கான செலவு (2001) | 6645.00 |
| மாதாந்தக் கூட்டத்திற்கான தேனீர் + சோடா செலவு | 1049.00 |
| இலங்கை வங்கியில் காசோலை காசாக மாற்றிய தொகை | 20000.00 |
| 150 வது ஆண்டு விழா உதயனில் பரிசுரித்த செலவு | 12000.00 |
| பாடசாலை கலை, வர்த்தக மாணவரின் "அரங்கம்" வெளியீடு முதல்பிரதி | 1000.00 |
| புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவரைக் கௌரவித்தசெலவு | 3502.00 |
| கொம்பியூட்டர் ஆசிரியருக்கு 1 மாத வேதனமாக கொடுத்தது | 3000.00 |
| வானவில் நிகழ்ச்சிக்கான செலவு | 130072.00 |
| பேராசிரியர் நினைவுதினம் சிற்றுண்டி + தேனீர்செலவு + அழைப்பிதழ்செலவு | 1919.00 |
| இலங்கை வங்கி நடைமுறைக்கணக்கில் O.D. மீண்டது | 50000.00 |
| விஞ்ஞானி கந்தையாவின் மறைவு உதயனில் பிரசுரித்த செலவு | 780.00 |
| உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு கனடாக்கிளை உத்தரவின்படி கொடுத்தது | 250000.00 |
| பழைய மாணவர் சங்கப்பொருட்கள் வைக்க அலுமாரி செய்தது | 8000.00 |
| கொழும்பிலிருந்து ஒலிபெருக்கி பாடசாலைக்கு கொண்டு வரச்செலவு | 8600.00 |
| நுண்கலை மன்றத்திற்கான உதவுதொகை | 31650.00 |
| நுண்கலை மன்ற மிருதங்கம் திருத்திய செலவு | 2250.00 |
| இலங்கை வங்கியில் காசாக உள்ளதில் இட்டது (c 6707 க.இ) | 108000.00 |
| காசோலைப் புத்தகம் | 250.00 |
| மிகுதி வங்கி 8860.60 | |
| காசு 22.75 | 8883.35 |
| | 786577.85 |

**வங்கியில் சேமிப்புப் கணக்குகள்:-**

**இலங்கை வங்கியில்**

| | |
|---|---|
| 1. சேமிப்பு புத்தகத்தில் (கண. இல. 19054),(8-7-2002) | 66169.77 |
| 2. நிலையான வைப்பு (592943), 31-12-2001) இல் இருப்பு | 317264.16 |
| 3. H.N.B இல் இருப்பு (24-07-2002) இல் 02- 2270901-6 | 860,198.62 |

**தேசிய சேமிப்பு வங்கியில்**

***நிலையான வைப்புகள்:-***

| | |
|---|---|
| அ) பழைய வைப்பு:- INS/15/97<br>புதிய வைப்பு இல:- INS/12/002 | 81,017.40 |
| ஆ) பழைய வைப்பு இல:- INS/11.5/195<br>புதிய வைப்பு இல:- INS/15/144 | 370,010.70 |
| இ) பழைய வைப்பு இல:- INS/15/113<br>புதிய வைப்பு இல:- INS/12/028 | 8,880.00 |
| சேமிப்புப் புத்தகத்தில் (கண.இல. 1037) | 64,375.37 |

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
### 2001 - 2002 ஆண்டிற்கான
### பழைய மாணவர் சங்கம்
### *கொழும்புக்கிளை*

போஷகர்:- கி.நடராசா

உப.போஷகர்:- திரு.R. பொன்னம்பலம், இ.பஞ்சநாதன், K.நீலகண்டன், V.ராஜா, K.சிதம்பரப்பிள்ளை

தலைவர்:- கலாநிதி சு. மகாலிங்கசிவம்

உபதலைவர்கள்:- திரு.S.தில்லைநடராசா
Dr.M.கோபாலசுந்தரம்
கந்தையா நீலகண்டன்
K.சபாரத்தினம், திரு.T.இரகுநாதன்

செயலாளர்:- திரு.K.மகாதேவன்

உபசெயலாளர்:- திரு.V.நவரத்தினம்

பொருளாளர்:- திரு.V.மகாதேவன்

உபபொருளாளர்:- திரு.M.கணபதிப்பிள்ளை

நிர்வாக சபை அங்கத்தவர்கள்:-
திரு.V.கமலநாதன்
திரு.K.பிரதாப்
Dr.S.ஜெயரட்ணம்
திரு.A.தளையசிங்கம்
திருமதி K.இளம்பிறைநாதன்
திருமதி S.சச்சிதானந்தசிவம்
திரு.P.சிவலிங்கம்
திரு.V.M.நடராசா
திரு.E.W.செல்வராசா
திரு.S.சேனாதிராசா
திரு.N.கஜேந்திரன்

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## 2000 – 2001 ம் ஆண்டிற்கான
## பழைய மாணவர் சங்கம் நிர்வாகிகள்

காப்பாளர்:- திரு.கி.நடராசா B.A.Dip,M.A.(Ed),SLTS I

தலைவர்:- பேராசிரியர் அ.நவரட்ணராசா B.VSc(Hon)M.Phil(U.K.)

உபதலைவர்கள்:- திரு.க.சண்முகசுந்தரம் B.Sc Dip in Ed (Ceylon)
திரு.சு.முத்துரத்தினானந்தன் B.Sc Eng,MIE(SL) C.Eng

செயலாளர்:- திருமதி இ.தில்லையம்பலம் B.A.Retirid Teacher

உபசெயலாளர்:- திரு.மகாதேவன் Teacher

பொருளாளர்:- திருமதி ப.அருள்வேல்நாதன் B.Sc

நிர்வாக சபை:-

திரு.தி.யோகசாமி Rtd.SLPS II
திரு.S.A.இரத்தினசிங்கம்
திரு.A.தணிகாசலம்
திரு.சீ.வடிவேல்
திரு.P.சத்திவேல்
திரு.S.சுப்பிரமணியம்
திரு.S.யோகேஸ்வரன்
திரு.P.குகதாஸ்
திரு.S.பரமேஸ்வரன்

கணக்காய்வாளர்:- திரு.சி.ராமகிருஷ்ணன் Teacher

நுண்கலை மன்ற நிர்வாகிகள்

தலைவர்:- திரு.தி.யோகசாமி

செயலாளர்:- திரு.M.P.தர்மலிங்கம்

பொருளாளர்:- திருமதி இ.தில்லையம்பலம்

நிர்வாக சபை:- திருவாளர்கள்
K.தணிகாசலம்
வி.சோதிராசா
S.சூரியகுமார்
ம.பாலசிங்கம்

கணாதிபன் அச்சகம் - கரணவாய்